# BRITISH TAMIL EXAMINATION BOARD (BTEB)

## பிரித்தானிய தமிழ்மொழிப் பரீட்சை சபை

www.bteb.org.uk

TAMIL LANGUAGE

# GRADE 6

# READING EXAMINATION - T06R

**Version A**

Additional materials:
Soft pencil (type B or HB)
Soft clean eraser

**TIME** 45 minutes

## INSTRUCTIONS TO CANDIDATES

Do not open this booklet until you are told to do so.

Answer **all** questions.

Write your name, Centre number and candidate number in the spaces on this page.

**Write your answers on the question paper itself.**

Use pencil

At the end of the test you must hand in the question paper to your supervisor.

Dictionaries must not be used.

| Date | Centre Name | Centre Number |
|---|---|---|
| / / | | |

| Candidate : Name | Candidate : Number |
|---|---|
| | |

**This question paper consists of 7 printed pages and 1 blank page.**

**T06R - PART I**

**Questions 1-5**

**Read the following notices and decide which one is related to the following text (1-5).**

| | |
|---|---|
| **A** | இங்கு பராமரிக்கப்படும் முதியோர்கள் குறிப்பிட்ட வயதெல்லையைக் கடந்தவர்களாக இருக்க வேண்டும். |
| **B** | மாணவர்கள் விடுதி வசதியினைக் பெறுவதற்கான அனுமதிகளை உறுதி செய்து கொள்ளவும். |
| **C** | விடுமுறை நாளை முன்னிட்டு அறை வாடகைக்ககுச் சிறப்பு சலுகை வழங்கப்படும். |
| **D** | குழந்தைகள் ஐந்து வயதுவரை பராமரிக்கப்படுவார்கள். |
| **E** | நோயாளர்கள் தமக்குரிய இருக்கைகளில் அமர்ந்திருக்குமாறு கேட்கப்படுகிறார்கள். |

1. Rooms to let for holidays.
2. Hostel facilities are availble for students.
3. Medical facilities are avaialble for patients.
4. Elder care facilities are available here.
5. Child care facilities are available here.

## T06R -PART II

**Questions 6-10**

**It is given about the library. For questions 6-10 mark the correct Letter A-E**

**A** - நூல்கள்

பல மொழிகளில் புத்தகங்கள் உண்டு. விரும்பும் மொழியில் அவற்றைப் பெறலாம்.

**B** - பொறுப்பாளர்

நிர்வாகம் செய்வதோடு புத்தகங்களை வருவித்து அடுக்கி வைப்பார்.

**C** - கேட்போர் கூடம்

வளர்ந்தவர்களுக்கான பேச்சு, கலந்துரையாடல் இடம்பெறும்

**D** - சிறுவர் பிரிவு

மாணவர்களுக்கான வாசித்தலோடு, ஒப்படைக்கு தேவையான விடயங்களைப் பெறலாம்.

**E** - கணினிப் பிரிவு

கணினிகள் பாவனைக்கு வைக்கப்பட்டிருப்பதால் தகவல்களைப் பெறலாம்.

6. Conversation group for adults ☐

7. Computers could be used by anyone ☐

8. Manage the library ☐

9 Books can be borrowed in any language. ☐

10. Students can get information for their projects. ☐


## Questions 11-15

**Read the paragraph and answer the questions (11-15). Choose A, B or C.**


எளது பெயர் ராதா. எனக்கு பன்னிரண்டு வயது. எனது அம்மா பாடசாலை உணவில் பழங்கள் வைத்துவிடுவார். எனக்கு பால், முட்டை விருப்பமில்லை. ஆனால் அவற்றில் புரதச்சத்து அதிகம் உள்ளதால் அவற்றை உணவில் சேர்க்க வேண்டும் எனச் சொல்வார். நான் பாடசாலைக்கு சைக்கிள் வண்டியில் செல்வேன். இது சிறந்த உடற்பயிற்சியாகும். வீட்டிலிருந்து எட்டு மணிக்கு புறப்படுவேன். எனது நண்பி பாடசாலைக்கு அப்பாவின் காரில் வருவார். சிலவேளைகளில் வாகன நெரிசலால் பாடசாலைக்கு தாமதமாக வருவார்.

எனது நண்பி கைத்தொலைபேசி வைத்திருக்கிறார். நானும் அம்மாவிடம் கைத்தொலைபேசி வாங்கித்தருமாறு கேட்டபோது சிறிது நாட்கள் கழித்து வாங்கித் தருவதாக கூறினார். பாடசாலை முடிந்த பின் நானும் எனது நண்பிகளும் பாடசாலை மைதானத்தில் கூடைப்பந்து விளையாடுவோம். எமது பாடசாலையிலிருந்து போட்டிக்காக கூடைப்பந்தாட்ட அணி செல்லவிருக்கின்றது. அதற்காக தினமும் பயிற்சி செய்வோம். மாலை ஆறு மணியளவில் வீடு திரும்புவோம்.


11. What food Ratha doesn’t like?



**A**



**B**



**C**

12. How does Ratha’s friend go to school?



**A**



**B**



**C**


13. What does Ratha play after school?



**A**



**B**



**C**

14. What does Ratha's friend have?



**A**




**B**




**C**


15. At what time does Ratha come home?



**A**



**B**



**C**

**Questions 16-20**

**Read the paragraph and answer the questions (11-15). Choose A, B or C.**

**கையடக்கத் தொலைபேசியின் சுயசரிதை**

“இன்று நான் பிள்ளைகளின் விளையாட்டுப் பொருட்களில் ஒன்றாக மூலையில் கிடக்கின்றேன். எனது பழைய சந்தோசமான வாழ்க்கையை நினைத்துப் பார்க்கிறேன்.

உலகின் எந்த மூலையிலும் எங்களது ஆதிக்கம் உள்ளது. மனிதர்கள் எங்கு பார்த்தாலும் எங்களுடன்தான் இருப்பார்கள். தமது குடும்பத்தினரையோ, உறவினர்களையோ விட்டுப் பிரிந்தால் கூட எங்களைப் பிரிந்து செல்ல மாட்டார்கள். என்னை அடையாளம் காண முடிகிறதா? ஆம் நான்தான் கையடக்கத் தொலைபேசி. நான் இங்கிலாந்தில் பிறந்தேன். நானும் எனது நண்பர்களும் விற்பனைக்காக கடையில் வைக்கப்பட்டிருந்தோம். அப்போது ஒருவர் வந்து என்னழகைப் பார்த்து விருப்புடன் வாங்கிச் சென்றார். தனது சட்டைப்பையில் எப்போதும் என்னை வைத்திருப்பார். என்னைப் பாதுகாப்பதற்காக ஒரு கடையில் எனது அளவிற்கு ஏற்றதாக கறுப்பு நிறத்தில் உடை வாங்கிப் போட்டுவிட்டார். நான் மிகவும் கம்பீரமாக இருப்பதைக் கண்டு பெருமைப்பட்டுக் கொள்வேன். எங்கள் வீட்டில் என்னோடு வேறு இரு நண்பர்களும் உள்ளனர். ஒருவர் எப்போதும் வீட்டிலேயே இருப்பார். மற்றவரை எசமானி வைத்திருப்பார். நான் அடிக்கடி வெளியில் சென்றுவருவேன். மற்றவர்களுடன் உரையாடுதல், பாடல்கேட்டல், குறுஞ்செய்திகளை அனுப்புதல், தகவல்களைத் தேடிப் பெற்றுக் கொள்ளுதல், புகைப்படம் எடுத்தல் போன்ற பல வேலைகளைச் செய்வேன். ஒரு நாள் கடைக்குச் சென்றபோது என்னைப் போல வேறொன்றை பணம் கொடுத்து வாங்கினார். அது அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்டபோது இன்னும் பல வசதிகளைக் கொண்டதாயிருந்தது. அதற்குப் பிறகு என்னை வீட்டிலேயே வைத்துவிட்டார். புதிதாக வந்த நண்பரைத்தான் தன்னுடன் எடுத்துச் செல்வார். நாளடைவில் நானும் அவரது பிள்ளையின் விளையாட்டுப் பொருட்களில் ஒன்றாகிவிட்டேன்.

16. Mobile phone is telling a story about itself

A. Right B. Wrong C. Not in the text.

17. Mobile phone is made in America.

A. Right B. Wrong C. Not in the text.

18. Mobile phone is used to send sms

A. Right B. Wrong C. Not in the text.

19. Mobile phone is being used now as a toy.

A. Right B. Wrong C. Not in the text.

20. Television is in the living room.

A. Right B. Wrong C. Not in the text.

# T06R- PART V

## Questions 21-25

## Read the story and answer the questions (21-25)

ஒரு சமயம் அரசர் கவலையுடன் காணப்பட்டார். அவரை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவர மந்திரிகள் ஆலோசனை நடத்தினர். அரசரை மகிழ்விப்பதற்கு கலை நிகழ்ச்சி நடத்தலாம் எனவும் படைகளின் வீரசாகச விளையாட்டு நடத்தலாம் எனவும் கூறினர். அப்போது தென்னாலி இராமன் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தான். அரசர் அவர் பேசாமலிருப்பதைப் பார்த்து தன்மீது அக்கறை இல்லையோ எனக் கேட்டார். அப்போது தென்னாலி இராமன் தன்னோடு வரும்படியும் உலகிலேயே அழகிய மலர்களைக் காட்டுவதாயும் கூறினார். மறுநாள் தென்னாலி இராமனுடன் அரசனும் படைகளும் புறப்பட்டன. அவர்கள் சென்ற வழியில் பெரிய மைதானம் வந்தது. அங்கு பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அரசர் அந்தப் பிள்ளைகளுடன் விளையாடத் தொடங்கினார். தாம் ஒரு நாட்டு அரசர் என்பதையும் மறந்து பிள்ளைகளை உப்புமூட்டை தூக்கினார். யானையைப் போல் முதுகில் சுமந்தார். தென்னாலி இராமனும் மந்திரிகளும் இதைப் பார்த்து மகிழ்ந்தார்கள். அப்போது அரசர், தென்னாலி இராமனிடம் பிள்ளைகளோடு விளையாடுவது மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது எனக் கூறி, உலகிலேயே அழகிய மலர்கள் எங்கே உள்ளன எனக் கேட்டார். அப்போது தென்னாலி இராமன் இந்தப் பிள்ளைகள் தான் அழகிய மலர்கள் என்றும் பிள்ளைகளுடன் விளையாடுவது மகிழ்ச்சியைத் தரும் என்றும் கூறினான்.

21. Who was sad?

A. King B. Minister C. Thennali Raman

22. What was Thennali Raman's idea?

A. Doing Programme B. Showing beautiful flowers C. Doing meditation

23. Where was the children playing?

A. At King's place B. At Thennali Raman's house C. At the play ground

24. Who were the beautiful flowers?

A. Children B. Troops C. Ministers

25. What was the reason for King's happiness?

A. Seeing beautiful flowers B. Strolling outside C. Playing with children

BLANK PAGE